3.11.2025 O.S 390/2018 பி.வா.சா1 ராமதாஸ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி

புல எண். 571/11 ஐ பொறுத்து மாடச்சிநாயுடு பெயரில் எந்த பட்டாவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாடச்சிநாயுடுவிற்கு பெருமாள் நாயுடு, மாடச்சிநாயுடு ஆகியோர்கள் குமாரர்கள் என்றால் பெருமாள் என்ற முத்துசாமி நாயுடு மற்றும் மாடச்சி மகன் மாடச்சி ஆகியோர்கள் வாரிசுகள் ஆகும். பெருமாள் நாயுடு என்பவருக்கு முத்துசாமி என்ற மற்றொரு பெயர் உள்ளது என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பெருமாள் நாயுடு பெயரிலோ அல்லது அவரது சகோதரர் மாடச்சி நாயுடு பெயரிலோ வழக்கு சொத்தை பொறுத்து பட்டா இல்லை என்றால் தற்போது இல்லை. பத்திர ஆவணங்களில் உள்ளது. பெருமாள் நாயுடு அவரது மகள் நல்லம்மாளுக்கு கடந்த 29.8.1960 தேதியில் குறியீடு செய்யப்பட்ட ஆவணத்தில் மாடச்சி நாயுடுவின் மகன் பெருமாள் நாயுடு என மட்டுமே உள்ளது என்றும், அவருக்கு முத்துசாமி என்ற பெயர் இருப்பதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். முத்துசாமி என்பது அவரை அழைக்கும் பெயராகும். பி.வா.சா.ஆ 1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் வழக்கு சொத்தின் சர்வே எண் 571/11 பற்றி சொல்லப்படவில்லை என்றால் பழைய சர்வே நம்பர் உள்ளது. அதற்கு ஆதரவாக முன்னால் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. என் வீட்டிற்கு கீழ்பக்கம் கோபால் நாயுடுவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். என் வீடு போக வடபக்கமுள்ள சர்வே எண். 571/12 ல் காலிமனைகள் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 571/12 க்கு வடக்குபகுதியில் சர்வே எண்.571/8 சி உள்ளது என்றால் சரிதான். புலஎண். 571/8 சி என்பது

மீனாட்சி தேவர் வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். புலஎண். 571/8 சி–யில் ஒரு பகுதியை கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். என் வீட்டிற்கு தென்பக்கம் கிழமேல் ரோடு உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் புல எண். 571/12 ல் கண்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ள எல்கைமால்படி சர்வே எண். 571/12 ஐ தான் குறிக்கும் என்றால் சரியல்ல. புல எண். 571/11, 12 யும் சேர்த்து குறிக்கும். 30.07.1965 ல் ராமதாஸ் நாயுடுவிற்கும் அவரது மனைவிக்கும் , மாடச்சி நாயுடுவின் வாரிசுகள் எழுதி கொடுத்ததாக சொல்லக்கூடிய பி.வா.சா.ஆ 2 ஆவணத்திலும் வழக்கு சர்வே எண் 571/11 குறிப்பிப்படவில்லை என்றால் சரிதான். பழைய சர்வே எண். 89/2 ல்10 என சொல்லப்பட்டிருக்கும். பி.வா.சா.ஆ 2 ல் உள்ள எல்கைமால்களின்படி புல எண். 571/12 ஐ தான் குறிக்கும் என்றால் சரியல்ல. புல எண்.571/11 ஐ குறிக்கும். பி.வா.சா.ஆ 1,2 ஆவணங்கள் எழுதிக்கொடுத்த நபர்களுக்கு எந்த ஆவண எண், எந்த பட்டா மூலம் பாத்தியப்பட்டது என குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பழைய பட்டா மற்றும் ஆவணம் எறிந்துவிட்டதால் சொல்லப்படவில்லை. அவ்வாறு எறிந்துவிட்டது சம்பந்தமாக எந்த ஒரு ஆவணங்களும் எனது தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 3 ஆவணமானது வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் நான் மோசடியாக என் மூதாதையர்கள் பெயருக்கு மோசடியாக வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1977 ம் ஆண்டு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. நான் அப்போது பிறக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பட்டாவில் வாதிகளின் தாத்தா பெயரும் அடங்கியுள்ளது

என்றால் சரியல்ல. 5.2.2014 ம் தேதி வழக்கு சொத்தினை பொறுத்து என் தாயார் மற்றும் சகோதரியிடம் இருந்து நான் எழுதி வாங்கியதாக சொல்லும் பாகபத்திரம் பி.வா.சா.ஆ 4 ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் அந்த ஆவணத்தில் உள்ள எல்கைமால்களின்படி புல எண்.571/12 ன் சொத்தை தான் எனது சகோதரிகள் விடுதலை செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. புல எண். 571/11 ஐ கொடுத்தார்கள். பி.வா.சா.ஆ 4 ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். அதிலுள்ள சொத்து விபரம் சரியானது என்றால் சரிதான். பழைய ஆவணங்களில் உள்ள எல்கை காண்பிக்கப்பட்டுள்ளது. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.571/11 ஐ அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் உரிமைமூலம் இல்லாமல் பி.வா.சா.ஆ 4 ஆவணத்தை வாதிகளுக்குரிய புல எண்ணை சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. சர்வே எண். 571/11 ல் ஒரு பகுதியை வாதிகளுக்கு கிரையம் கொடுத்தது போல பி.வா.சா.ஆ 5 தாக்கல் செய்துள்ளேன் என்றும், அந்த ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் ஏற்கனவே வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதால் அதனை கிரையம் கொடுப்பதற்கு எனக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.